தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1981 மார்ச் 26.

பங்குனி 13, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஆசிரியர் பயிற்சி பெறுவோர்

*** 169 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) டி.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுபவர்கள், எந்தப் பாடங்களில் தவறினார்களோ அவைகளை, மறுபடியும் தனித்தனியாக எழுதி வெற்றி பெற அனுமதிக்கப்படுகின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இச்சிறப்புரிமையை ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் வகுப்பு மாணவர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, எந்தப் பாடத்தில் தவறுகிறார்களோ அந்தப் பாடத்திலே மறுபடியும் தனியாக எழுதி, வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பு ஏனைய தேர்வுகளில் இருக்கும்போது, ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் மாணவர்களுக்கும் இதை நீட்டித்தால் பயனளிக்கக் கூடியதாக இருக்கும். இப்பொழுது இல்லாவிட்டாலும் வருங்காலத்திலாவது இதைச் செய்ய அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: டி.எஸ்.எல்.சி. என்பது ஆறு வார கால, குறுகிய காலப் பயிற்சியாகும். ஆகவே இந்தக் குறுகிய கால பயிற்சிக்குப் பகுதிமுறைத் தேர்வு நடத்துவது இல்லை என்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர் பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கு என்று அதிலே கேட்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் பதில் சொல்லும்போது, "விடை.—(அ) ஆம் : (இ) இல்லை" என்று சொன்னேன். உறுப்பினர் கேட்ட கேள்வி (இ).

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் கேள்வியிலேயே தவறு இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு" என்றுதான் எழுதியதாக நினைவு. எழுத்துப் பிழையாக "டி.எஸ்.எல்.சி." என்று ஆகியிருக்குமென்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆம் என்றால் சரி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன் என்று சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேவையான பதில் மாண்புமிகு உறுப்பினருக்குக் கிடைத்துவிட்டது.

திரு. பா. ரா. தாமஸ் : டி.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு ஐம்பது விழுக்காடு மதிப்பெண் களைப் பெற வேண்டும் என்ற நிலை இப்போது இருக்கிறது. ஆகவே, பலர் தோல்வி அடையும் சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், பயிற்சிப் பள்ளிகளில் தேவையான ஆசிரியர்களை முழுமையாக நியமிக்க அரசு அனுமதி வழங்காத காரணத்தால், ஒரே ஒரு ஆசிரியர் அங்கே இருந்துகொண்டு அனைத்துப் பாடங்களையும் நடத்துவதால் குறைந்தபட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்களைக் கூட அவர்களாலே பெற முடியவில்லை. ஆகவே, அந்தத் தேர்வில் வெற்றி பெற 35 விழுக்காடு மதிப்பெண்கள் எடுத்தாலே போதும் என்று கூற அரசு முன்வருமா? அதே சமயத்தில் போதுமான ஆசிரியர் களையும் நியமித்து பயிற்சியைச் சிறப்பாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பயிற்சி சிறப்பாக நடைபெற போதுமான ஆசிரியர்களைப் போட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆனால் மார்க்கைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுவது சரியாக இல்லை. காரணம், சொல்லித் தருகின்ற ஆசிரியர்கள் 50 சதவீதம் கூட மதிப்பெண்கள் எடுக்க வில்லையென்றால், படிக்கின்ற மாணவர்களுக்கு நல்ல கல்வியைத் தர

1981 மார்ச் 26]

முடியாது. அவர்களுடைய தொழிலே சொல்லித் தருகின்ற தொழிலாக இருப்பதால், 50 சதவிதம் மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று முன்னாலேயே வைத்திருக்கிறார்கள். நாமும் அதையே பின்பற்றி வருகிறோம்.

திரு. பா. ரா. தாமஸ : பொதுவாக இன்று கல்விக் கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் செமஸ்டர் முறை பின்பற்றப்படுகிறது. மூன்று மணி நேரம் தேர்வு எழுதும் நிலை இருக்கிறது. முதலாண்டில் சில பாடங்களிலும், இரண்டாம் ஆண்டில் சில பாடங்களிலும் தேர்வு எழுதுகிறார்கள். அது போலவே இதிலும் தேர்வு முறையை மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளிலே செமஸ்டர் முறை இருக்கிறது. அதற்குக் கீழே இருக்கின்ற பள்ளிகளிலே அது போன்ற செமஸ்டர் முறையைப் புகுத்துவதுபற்றி அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

முறைசாராக் கல்வி

*170 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முறைசாராக் கல்விக்காக, மத்திய அரசு 1977-78, 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் மாநில அரசுக்கு எவ்வளவு நிதி உதவி செய்தது ?

(இ) 15—6—1980 நாளன்றுள்ளபடி, முறைசாராக் கல்வி நிலையங்கள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன ?

(உ) எத்தனை மாணவர்கள் அங்கு பயில்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) முறைசாராக் கல்விக்காக மைய அரசு 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 10,12,200-ம், 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 4,22,913-ம் 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 70,03,000-ம் இம்மாநில அரசுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

(இ) 9,805 நிலையங்கள்.

(உ) 2,86,011 மாணவர்கள் பயில்கின்றனர்.